# சென்னைப் பல்கலைக்கழகம்

# தமிழ் வளர்ச்சித் துறை

# பெரியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு, 6–2–2009

# மனித நேய மாமகுடம்

**பேரா. வா. செ. குழந்தைசாமி**

**1. உழைக்கப் பிறந்த உத்தமர்**

- பெரியார் ஏறத்தாழ 95 ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்தார்; மறைந்து 35 ஆண்டுகள் கழிந்தன: 130 ஆண்டு வரலாறு இருக்கிறது
- எழுதிய எழுத்துகள் நிகழ்த்திய சொற்பொழிவுகள்
- விட்டுச் சென்ற நிறுவனங்கள்; அவரோடு நெருங்கிப் பழகியவர்கள்

என நமக்குத் தேவையான அளவுக்குத் தரவுகள் இருக்கின்றன

இந்தப் பின்னணியில் பெரியார் பற்றிய நமது சமுதாயத்தின் முழுமையான மதிப்பீடு என்ன? முறையான மதிப்பீடு இருக்கிறதா?

**பெரியார் பற்றிய பார்வை: பல பரிமாணங்கள்**

- பிரித்தானிய ஆட்சியை ஆதரித்தவர்
- இலக்கியங்களை எரித்தவர்: நாத்திகர்
- பிராமணர் விரோதி: பிரிவினைவாதி: இந்து மதத்தை எதிர்த்தவர்: இந்துக் கடவுள்களை இழிவு செய்தவர்
- பெண்ணுரிமையை வரம்பு மீறிப் பரிந்துரைத்துப் பேசியவர்
- நடைமுறை ஒழுக்க விதிகளை மதிக்காதவர்

இவை அனைத்தும் உண்மை. இதை அவரே மறுக்கமாட்டார் ஆனால் இவை தான் முழுமையான உண்மையா?

- யானை கண்ட குருடர்கள் சிரஞ்சீவிகள்: அவர்கள் எங்குமிருப்பர், என்றுமிருப்பர்.

நான் மாணவனாக இருந்த பொழுது, பெரியார் அவர்கள் சேலம் விக்டோரியா மைதானத்தில் 1946 – இல் பேசும் பொழுது, அவர் சொற்பொழிவைக் கேட்டேன். அவர் கூறியது பசுமையாக நினைவில் இருக்கிறது.

“மத்தளம் இருபுறத் தோலும் கிழியும் வரை அடிபட்டுத்தான் முடிவு பெறும். நாதசுரக் குழல் உடையும் வரை ஊதப்பட்டுத்தான் தீரும். கட்டை வண்டி

முறியும் வரை ஓடும். அதைப் போலவே எனது உடலில் உயிர் இருக்கும் வரை இந்தச் சமுதாயத்திற்காக உழைத்துத்தான் தீருவேன், மறைவேன்'' என்றார்

- அவர் தமது 93–ஆவது வயதில், மறைவதற்கு ஓராண்டு முன்பு 183 நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார். 249 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.
- அவர் தமது இறுதி ஆண்டான 94–ஆவது வயதில் 177–நாட்கள் பயணம் செய்தார். 229 சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.
- 95 – ஆவது ஆண்டின் அரம்பத்தில் இறந்தார். அவர் 22.12.73 அன்று இறக்கு முன் கடைசிச் சொற்பொழிவாக 19.12.1973 – இல் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு ஒரு நாள் முன்னதாக தியாகராய நகர் சிந்தனையாளர் மன்றத்தில் பேசினார். தமது 95 – ஆவது வயதிலும் அவர் வாழ்ந்த 98 நாட்களில் 35 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். உடலில் உயிர் இருக்கும் வரை உழைத்த வாழ்வுக்கு இதை ஒத்த இன்னொரு சான்று காண்பது இயலாதென்றே கூற வேண்டும்.1

**2. துணைவியர் மறைவும் தொண்டுக்குத் துணை**

அவருக்கு மகன் இல்லை, மகள் இல்லை. அவர் தமது துணைவியாரைப் பெரிதும் நேசித்தார். துணைவியர் மறைந்த பொழுது பெரியார் குடி அரசு இதழில் எழுதிய தலையங்கம் அவர் சமுதாயத் தொண்டில் எவ்வாறு தம்மை இணைத்துக் கொண்டிருந்தார் என்பதற்குச் சான்றாக அமையும்.

> ''பெண்கள் சுதந்திர விஷயமாகவும், பெண்கள் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ – போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாள் விஷயத்தில் நான் நடந்து கொண்டிருந்தேன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.
>
> இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.
>
> அதென்னவென்றால், நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும் நான் பொதுநல சேவையில் ஈடுபட்ட பிறகு, பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாகச் சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான்.
>
> நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும் ஒரு நஷ்ட சம்பவமாகவும் கருதாமல், அதை ஒரு மகிழ்ச்சியாகவும், இலாபமாகவும் கருத வேண்டும்

என்றே நான் ஆசைப்படுகின்றேன். ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மையென்றும் கருதுகிறேன்.

எப்படியெனில், எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்களோ சிறிது விசேஷ சம்பவங்களாக இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால் அந்த அம்மாளுக்கு அவை மிகுந்த துக்கமாகவும் துயரமாகவும் காணக்கூடியதாய் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமிருக்காது. அத்துடன் இதைக் கண்டு சகியாத முறையில் யானும் சிறிது கலங்கக்கூடும்.

ஆதலால், நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்டதுடன் 'குடும்பத் தொல்லை' ஒழிந்தது என்கின்ற ஓர் உயர் பதவியையும் அடைய இடமேற்பட்டது.2

தனது அருமைத் துணையான மனைவியின் பிரிவுக்கு ஒரு புறம் வருந்தினார் என்றாலும், தனது பொதுத் தொண்டுக்கு, குடும்பப் பொறுப்பென எதுவும் குறுக்கே இல்லாமல் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளத் தனக்கு ஒரு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று கூறுகிறார். அசாதாராணமான பொது நல ஈடுபாடு என்பதைத் தவிர வேறு என்ன கூற முடியும்.

**அன்னை கஸ்தூரி பாய் இறந்த பொழுது காந்தியடிகளும் கண்ணீர் விட்டார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.**

**3. தன்னலமில்லாத சமுதாயச் சேவை**

பெரியார் தமக்கென எந்தப் பொறுப்பையும் பெருமைக்காகத் தேடிக் கொள்ளாதவர். புகழையும் நாடாதவர்.

- **1940 –** இல் ஒரு முறை அவரைச் சென்னை மாகாணத்தின் பிரதமர் பொறுப்பை ஏற்குமாறு ஆளுநர் கேட்டார்.
- **1942 –** இல் மீண்டும் ஒரு முறை அதே அழைப்பு வந்தது.

பெரியார் தயக்கமின்றி மறுத்து விட்டார்.

95 ஆண்டு கால அவர் வாழ்வு, அவர் எழுத்து, பேச்சு, செயல், அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் பொழுது பெரியாரைப் பற்றி நம் முன் விசுவரூபம் எடுத்து நிற்கும் உருவம் இது தான்.

பெரியாரைப் பற்றிய பூரணமான பார்வை:

**பெரியார் இருபதாவது நூற்றாண்டில் இந்தியா உலகுக்கு அளித்த தலைசிறந்த மனிதநேயவாதி. அணுவளவும் சமரசம் செய்து கொள்ளாத**

**மனித உரிமைப் போராளர். அவருக்கு முன்னும், இதுவரை அவருக்குப் பின்னும் இந்திய வரலாறு கண்டிராத அபூர்வ மனிதர். அவர் யாருக்கும் தனிப்பட்ட முறையில் விரோதி அல்ல. விரோதியாகப் பார்க்கும் தேவையுமில்லை. அவர் சில சக்திகளைச் சமூக விரோதச் சக்திகளாகப் பார்த்தார்.**

**4. பெண் விடுதலை**

**4.1. தனிச் சிறப்பு**

பெரியாரின் சீர்திருத்த முயற்சிகளில் பல, அவருக்கு முன்னிருந்தவர்களும் ஈடுபட்டவையாகும். அனைவரும் அறிந்தவையுமாகும். **மற்ற சீர்திருத்தவாதிகளைவிட இமயச் சிகரம் என பெரியார் உயர்ந்து நிற்கும் கொள்கைப் போராட்டங்கள் சிலவற்றை நான் குறிப்பிட வேண்டும். முதலாவது பெண்கள் விடுதலைக்காக அவருடைய போராட்டம்.**

பெண்களின் அடிமைத்தனம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டு வரலாறு உடையது. விதிவிலக்கின்றி உலகின் எல்லாப் பகுதிகளிலும் பெண்கள் அடிமை நிலையை அனுபவித்தே வந்திருக்கிறார்கள்.

**4.2. கன்ஃபூசியஸ்**

பழம் பெருமைக்குப் பேர் போன சீன மண்ணில் அதன் நாகரிகத்தின் பண்பாட்டின் சின்னமாகக் கருதப்படுபவர் கன்ஃபூசியஸ்.

பெண்களைப் பற்றி அவருடைய கருத்து பின் வருமாறு:

**“பெண்களிடமும் கல்லாதவர்களிடமும் நடந்து கொள்வது மிகவும் கடினமான காரியமே. இவர்களிடம் நெருங்கிப் பழக முற்பட்டால் நம்மைப் பயன்படுத்திக் கொள்வார்கள். இவர்களைப் புறக்கணித்தாலும் அதை விரும்பமாட்டார்கள்.”** 3

**4.3. பிளேட்டோ**

ஐரேப்பியர்கள் நாகரிகத்தின் தொட்டிலாகக் கருதுவது கிரேக்கம். சாக்ரடீசும், ஃபிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் உலக அறிஞர்கள் வரிசையில் முதலிடத்தில் இருப்பவர்கள்.

கிரேக்க சமுதாயம் பெண்களை மதித்த சமுதாயம்: சமமாகக் கருதிய சமுதாயம். இருந்தாலும் திறமை என்று மதிப்பிடும் பொழுது. ஆண்களிலும், பெண்கள் மாற்றுக் குறைந்தவர்கள் தான் என்று மாபெரும் சிந்தனையாளராகிய பிளேட்டோவே குடியரசு [Republic] என்ற நூலில் பதிவு செய்திருக்கிறார். அவர் கருத்துப் பின் வருமாறு:

**“And if so my dear friend”, I said “there is no special faculty of administration in a state which a woman has, because she is a**

**woman or which a man has by virtue of his sex, but the gifts of nature are alike diffused in both; all the pursuits of men are the pursuits of women also, but in all of them a woman is inferior to a man". 4**

**4.4. புத்தர்**

நாம் இப்பொழுது இந்தியாவுக்கு வருவோம். இந்தியச் சிந்தனையாளர்களில் இன்றும் உலகு போற்றும், இடத்தைப் பெற்றிருப்பவர் புத்தர். அவர் முதலில் புத்த மதத்தின் சங்கத்தில் பெண் துறவிகளாகப் பெண்களைச் சேர்த்துக் கொள்வதை விரும்பவில்லை, வற்புறுத்தலின் கீழ் ஒப்புக் கொண்ட பொழுது பின் வருமாறு கூறியிருக்கிறார்.

**"If Ananda, women had not received permission to go out from the household life and enter the homeless state, under the doctrine and discipline proclaimed by the Tathagata, then would the pure religion, Ananda, have lasted long; the good law would have stood fast for a thousand years. But since, Ananda, women have now received that permission, the pure religion, Ananda, will not now last so long, the good law will now stand fast for only five hundred years. Just, Ananda, as houses in which there are many women and but few men are easily violated by robber burglars, just so, Ananda, under whatever doctrine and discipline women are allowed to go out from the household life into the homeless state, that religion will not last long." 5**

இது ஆண் ஆதிக்கப் பார்வை எனக் கருதப்பட்டால் அது தவறில்லை.

**4.5. பகவத் கீதை**

அடுத்து இறைவனின் அவதாரமாகிய கண்ணனின் கருத்துக்கு வருவோம். பகவத் கீதையில் அவருடைய விளக்கங்களில் பெண்களைப் பற்றி பின் வருமாறு கூறுகிறார். பாவப் பிறவிகள் என்கிறார்:

"ஏனெனில் என்னைச் சரணடைந்தவர்கள், மாதர், வைசியர், சூத்திரர் போன்ற 'பாவப் பிறவி' களாக இருந்த போதிலும், அவர்களும் ஒப்பற்ற இலட்சியத்தைக் காண்கிறார்கள்." 6

– அத்தியாயம் 9, சுலோகம் 32

**4.6. மனு**

தர்ம சாத்திரம் என்று பாராட்டப்படும் நூலைப் படைத்தளித்தவர் மனு. பெண்களைப் பற்றி நாம் ஏற்கதாகாதவனாகப் பல செய்திகளைக் கூறியிருக்கிறார். சான்றுக்காக சில வரிகள்.

> **"(When creating them) Manu allotted to women (a love of their) bed, (of their) seat and (of) ornament, impure desires, wrath, dishonesty, malice, and bad conduct".**
>
> **Ch.9. S:17**
>
> **In childhood a female must be subject to her father, in youth to her husband, when her lord is dead to her sons; a woman must never be independent 7**
>
> **Ch.5; S.148**

**4.7. சமணர்**

பெண்களைப் பற்றிய சமணர் பார்வையை அனைவரும் அறிவோம். சீவக சிந்தாமணியில் வரும் கீழ்க்காணும் பாடல் அவர்களுடைய அணுகுமுறையை விளக்கும். பௌத்தமும், சமணமும் துறவறத்தை உயர்த்திப் பிடித்த சமயங்களாகும்.

பெண்ணெனப் படுவ கேண்மோ
பீடில, பிறப்பு நோக்கா
ஒண்ணிய திறத்த வல்ல
ஓராயிரம் மனத்தவாகும் 8

– சீவக சிந்தாமணி: திருத்தக்க தேவர்:

**4.8. விவேகானந்தர்**

அண்மைக் காலத்துக்கு வருவோம். துறவிகளில் புரட்சிகரமானவர் என்று கருதப்படுபவர் விவேகானந்தர். அவர் அமெரிக்காவிற்கு சென்ற பொழுது அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பொழுது பல இடங்களில் இந்தியாவில் பெண்கள் நிலை பற்றி, குழந்தைகள் திருமணம் பற்றி, கேள்வி கேட்கிறார்கள்.

ஒரு வயதிற்குக் கீழ் கூட குழந்தைகள் விதவைகளாகக் கருதப்படும் நிலைமை அன்று இருந்திருக்கிறது. அவர் காலத்திற்குச் சற்றுப் பிந்திய 1921 மக்கட் கணக்கு இநத் நிலைமையை விளக்கும். 9

| | |
|---|---|
| 1 Year baby widows | 597 |
| 1 to 2 year child widows | 494 |
| 2 to 3 year child widows | 1,257 |
| 3 to 4 year child widows | 2,837 |
| 4 to 5 year child widows | 6,707 |
| **Total upto 5 years** | **11,892** |
| | |
| 5 to 10 year young widows | 85,037 |
| 10 to 15 year young widows | 2,32,147 |
| 15 to 20 year young widows | 3,96,172 |
| 20 to 25 year young widows | 7,42,820 |
| 25 to 30 year young widows | 11,63,720 |
| **Total number of widows** | **26,31,788** |

இதைப் பார்ப்பவர்கள் இந்த உயிர்களின் நிலையை எண்ணிக் கண்ணீர் விடாமல் இருக்க இயலாது. இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணமாக இருப்பது சமய நம்பிக்கை ஆயினும், சமுதாய அமைப்பு ஆயினும் அதைக் கடுமையாகக் கண்டனம் செய்யாமல் இருக்க முடியாது. எந்த ஒரு சராசரி மனிதனின் மனச் சான்றும் இதை ஏற்காது. விவேகானந்தர்:

I do not believe in a God or religion which cannot wipe the widow's tears என்று விதவைகளிடம் தமக்கு இருக்கும் அனுதாபத்தைக் காட்டுகிறார்.

ஆனால் அவர் ஒக்லந்து [Oakland] நகரில் **19.3.1900**–இல் நிகழ்த்திய சொற்பொழிவு பற்றிக் கீழ்க்கண்ட செய்தி வெளியாகி இருக்கிறது.

> "He denied that the condition of the child widows is as bad has been represented, saying that in India the position of widows in general is one of great deal of influence, because a large part of the property in the country is held by widows. In fact so enviable is the position of widows that a woman or a man either might almost pray to be made a widow"
>
> vol. VIII p.242.

இந்தச் செய்தி சரிதானா என்று கூட நம்மை ஐயப்பட வைக்கிறது. ஆனால் இது அதிகார பூர்வமான வெளியீட்டில் எவ்வித மறுப்பும் இன்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இன்றும் சில இடங்கல் அவையினர் இப்பிரச்சினையில் காட்டிய ஈடுபாடு காரணமாக அடிகளார் இளம் குழந்தைகளின் திருமணம் பற்றி, விதவைகள் நிலை பற்றிப் பேச வேண்டிய தேவை ஏற்படுகிறது. **18.01.1990**–அன்று காலிஃபோர்னியா மாநிலத்தில் உள்ள பாசடேனா [Pasadena] என்ற ஊரில் Shakespeare Club House

என்ற இடத்தில் ‘இந்தியாவில் பெண்கள்’ என்ற தலைப்பில் நிகழ்த்திய நீண்ட சொற்பொழிவில் சில கருத்துகளை வெளியிட்டிருக்கிறார். அவற்றுள் சில பின் வருமாறு;

> Now, there you are. Among the lower classes the number of men is larger than the number of women; and what would you naturally expect? A woman gets more chances of marriage, the number of men being larger.
>
> Relative to such questions as to widows not marrying: among the first two castes, the number of women is disproportionately large, and here is a dilemma. Either you have a non-marriagable widow problem and misery, or the non-husband-getting young lady problem.

விவேகானந்த அடிகள் எல்லாப் பிரச்சினைகளையும் அறிவுபூர்வமாக அணுகும் ஓர் ஆன்மிகவாதி. மனித நேயம் மிக்கவர். சமயத்தின் பேரில், பொருள் இல்லாத சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் ஏற்பவரல்லர்: எதிர்ப்பவரும் கூட, அவ்வாறு இருந்தும் விதவைகள் மறுமணம் என்று வரும் பொழுது, அவரே கூட மழுப்பலாகவே பேசுகிறார். வெளிப்படையாக ஆதரிக்க அவர் முன் வரவில்லை. இந்த நிலை பற்றி, பாரதி பின்வருமாறு எழுதுகிறார்.

> “மேலும் விவேகானந்தர் மஹா நீசத்தனமான வழக்க மொன்றுக்குத் தம்மையறியாமலே பொய் முகாந்தரங் கூறத் தலைப்பட்ட இடத்தில் முக்கியமான விஷய மொன்றை மறந்து போய்விட்டார். அதாவது ஸ்மிருதிகள் எழுதப்பட்ட காலத்தில் ஜன ஸங்கியைக் கணக்கு கிடையாதென்பதை அவர் மறந்து போய் விட்டார்..”
>
> ஜனஸங்க்கையா, விதவைகள் ஒரு நேரம்தான் சாப்பிடலா மென்று விதித்தது? கைம்பெண் முகத்தில் விழிப்பதும், வீதியில் செல்லும் போது ஒருவனுக்குக் கைம்பெண் எதிர்ப்படுவதும் அபசகுண மென்று. ஜனஸங்க்கையாம்.... நொண்டிக்கதை!

என்று விவேகானந்தரைச் சற்றுக் கடுமையாகவே கண்டிக்கிறார் பாரதி.

**4.9. காந்தியடிகள்**

இந்தப் பிரச்சினையில் காந்தியடிகளின் அணுகுமுறையும் பாராட்டத்தக்கதாக இல்லை. காந்தியடிகள் இந்தப் பிரச்சினைக்கு முதலில் இரு தீர்வுகள் கூறுகிறார்.

1. குழந்தைகள் திருமணத்தை நிறுத்திவிட வேண்டும்.

2. 15 வயதுக்கு உட்பட்ட கைபெண்களும் மற்ற இளமை உடைய கைபெண்களும் புணர் விவாதம் செய்து கொள்ள இடம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு சொல்லிவிட்டு, விருப்பப்பட்டவர்கள் இதை மேற்கொள்ளலாம். ஆனால் தமது குடும்பப் பெண்கள் இப்படிப்பட்ட மறுமணத் தீர்வைப் பற்றி எண்ணிக்கூடப் பார்க்கமாட்டார்கள் என்கிறார். அப்படிக் கூறிவிட்டு அவர் இன்னொரு கருத்தையும் பதிவு செய்தார்.

''பல வயதான ஆண்கள், இளம் பெண்களை திருமணம் செய்து கொள்வதால் அவர்கள் இறந்த பின் அந்தப் பெண்கள் விதவைகளாக இருக்க நேரிடுகிறது. எனவே ஒருமுறை திருமணம் செய்து கொண்ட ஆண்கள் அவர்களுடைய மனைவிமார் இறந்த பின் மீண்டும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற விதிமுறையை ஏற்படுத்தலாம்.''

இது இளம் பெண்கள் விதவைகளாவதைத் தடுக்கும் என்பது அவர் கருத்து. பாரதியார் இதைப் படித்துவிட்டு எள்ளி நகையாடுகிறார்.

பாரதியாரின் கருத்துப் பின் வருமாறு:

ஸ்திரீ – விதவைகளின் தொகையைக் குறைக்க வழிகேட்டால், ஸ்ரீமான் காந்தி ''புருஷ – விதவை''களின் (அதாவது; புனர் விவாகமின்றி வருந்தும் ஆண்மக்களின்) தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார். இதனின்றும், இப்போது ஸ்திரீ – விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்லுவதுபோல், அப்பால் புருஷ விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு அழுவதற்கு ஹேது உண்டாகும்.''11

மேலை நாட்டின் புகழ் வாய்ந்த தத்துவாதிகளும் பெண் உரிமையில் பெரிய பங்களிப்பு செய்தவர்களாகக் கருதப்படுவதற்கில்லை. இரண்டொரு சான்றுகள். பின்வருமாறு.

### 4.10. Schoponhauer

ஜெர்மன் தத்துவ அறிஞரான ஷோபன் ஹாவர் பெண்களைப் பற்றி தமது கருத்தை ஆங்காங்கு பதிவு செய்திருக்கிறார். மாதிரிக்காக சில வரிகள்.

"And how absurd it is to give properly right to women! All women are, with rare exceptions, inclined to extravagance..... women think that it is men's business to earn money and their's to spend it.... I am therefore of opinion that women should never be allowed altogether to manage their own

concerns, but should always stand under actual male supervision, be it of father, of husband, of son or of the state - as is the case in Hindustan; and that consequently they should never be given full power to dispose of any property they have not themselves required. It was probably the luxury and extravagance of the women of Louis VIII's court that brought on the general corruption of government which culminated in the French Revolution"

p.258, The Story of Philosophy: Will Durant.

### 4.11. Fred rich Nietzsche

ஜெர்மனியின் இன்னொரு தலை சிறந்த தத்துவ அறிஞர் ஃபிரடெரிக் நீஷே [Fredrich Nietzsche]. அவரும் பெண்களைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. அவருடைய சில கருத்துகள் பின் வருமாறு:

"Equality between man and woman is impossible, because war between them is eternal; there is here no piece without victory - peace comes only when one or the other is acknowledged inaster, It is dangerous to try equality with a woman; she will not be content with that; she will be rather content with subordination if the man is a man. Above all, her perfection and happiness lies in motherhood. Everything in women is a riddle, and everything, in woman hath one answer; its name is child - bearing," Man is for woman a means; the end is always the child. But wat is woman for a man.... A dangerous toy." Man shall be educated for war, and woman for the recreation of the warrior; everything else is folly."

- p.324, Fred rich Nietzsche.

### 4.12. பெரியார்

இந்தப் பின்னணியில் பெரியார் வருகிறார். இந்திய சமுதாயத்தில் காலம் காலமாக, பாரம்பரியத்தின் அடிப்படையில், பண்பாட்டின் அடிப்படையில் கட்டப்பட்டிருக்கும் உயர்ந்து நிற்கும் ஒழுக்கக் கோபுரத்தின் அடிப்படையையே தகர்க்கிறார். கற்பு, திருமணம், தாய்மை என்று புனிதமாகக் கருதப்படும் அனைத்தும் பெண்களுக்கு எதிரான ஏற்பாடு என்று சற்றுத் திடுக்கிடும்படியான கருத்தை முன் வைக்கிறார். கற்பு என்பது பற்றி அவருடைய கருத்துப் பின் வருமாறு:

I cannot find a more hateful practice in human society than the impostion of chastity, in all circumstances on woman alone. 12

பெரியார் காலம் வரை கற்பு என்பதைக் கேள்விக் குறியாக்க எந்தத் தலைவரும் கனவிலும் கருதியதில்லை. திருமணம் என்ற ஏற்பாடும் பெண்களை, ஆண்கட்கு நிரந்தரமான அடிமைகளாக வைத்திருப்பதற்குச் செய்யப்பட்ட சமுதாய ஏற்பாடு என்கிறார். பரத்தையர் என்ற ஏற்பாட்டைப் பற்றிப் பின்வரும் கருத்தைப் பதிவு செய்கிறார்.

“Ideas behind the application of the word prostitute to women alone are that women are slaves of men, that they are only objects of men’s lust and they can be bought and sold and rented out.” 13

தாய்மை என்பது பற்றியும் அவருடைய கருத்து பின் வருமாறு:

தாய்மையும், பெண்கள் அடிமைப்பட்டிருப்பதற்கு ஒரு காரணமாக இருக்கிறது.

பெண்களை அடிமைப்படுத்த ஏதுவாக இருந்த பிள்ளைப் பேற்றினைக் கட்டுப்படுத்தும் கொள்கையை **1928–**முதலே எடுத்தியம்பியவர் பெரியார்.

இங்கு நாம் பண்டைய சமுதாயத்தின் சில நம்பிக்கைகளை எண்ணிப் **பார்க்க வேண்டும்: Virgin என்ற ஆங்கிலச்** சொல்லுக்கு ஆண்பால் ஆங்கிலம் மற்று எந்த மொழியிலும் இல்லை என்று Will Durant பதிவு செய்திருக்கிறார். தமிழிலும் கன்னி என்ற சொல்லுக்கு ஆண்பால் இல்லை. அதைப் போலவே Prostitute என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஆண் பால் இல்லை. தமிழிலும் பரத்தை என்ற சொல்லுக்கு ஆண் பால் இல்லை. பரத்தன் என்ற தமிழ்ச் சொல் பரத்தையரிடம் செல்பவனைத்தான் குறிக்கும். இந்த இரண்டு சொற்களும் Feminine Gender என்ற நிலையில் இருந்து Oxford அகராதியில் Neuter Gender ஆக ஒரு **50** ஆண்டு காலத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. விவரம் பின் வருமாறு:

Virgin என்ற ஆங்கிலச் சொல் முன்பு பெண் பால். அதற்கு ஆண்பால் கிடையாது. ஆனால் கால மாற்றத்தைக் கருதி அதைப் பொதுப்பால் Neuter gender ஆக்கிவிட்டார்கள்.

Virgin - **Girl** or woman who has not known sexual intercourse.

Oxford Dictionary 1942

Virgin – **Person,** typically a woman, who has never had sexual inter course.

Oxford Dictionary 1999

இதைப் போலவே Prositute என்பதும் பெண்பால்தான். அதற்கு ஆண்பால் இல்லை இப்பொழுது அதையும் பலவின் பால் ஆக்கியிருக்கிறார்கள்.

Prostitute - **Woman** who hires herself or is hired to men for sexual inter course.

Oxford Dictionary - 1942

Prostitute - **A person**, typically a woman who engages in sexual activity for payment.

Oxford Dictionary - 1999

தமிழிலும் கன்னி என்ற சொல்லுக்கு ஆண்பால் இல்லை. பரத்தை என்ற சொல்லுக்கும் நேரான ஆண் பால் இல்லை.

Virgin என்ற சொல்லுக்கு எந்த மொழியிலும் ஆண்பால் இல்லை. அதனால் தான் பாரதி:

"கற்பு நிலை என்று சொல்லவந்தார்: இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" என்றார்.

மூவாயிரம் ஆண்டு காலப் பெண்கள் வரலாற்றில் உலகம் முழுமையுமாக சேர்ந்து முதன் முதலாக பெண் விடுதலைக்கு முறையான குரல் கொடுத்த ஒரே தலைவர் பெரியார் தான்.

**5. பெண்ணியம்**

பெண்ணியம் என்ற இயக்கம் 19 – ஆவது நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. இன்றைய நிலையில் பெண்ணிய முயற்சிகளை மூன்று கட்டங்களாகக் காணலாம்.

1. **முதற் கட்டம்:** பத்தொன்பதாவது நூற்றாண்டில் இறுதி: இருபதாவது நூற்றாண்டின் ஆரம்பம். சொத்துரிமை, வாக்குரிமை போன்றவை,
2. **இரண்டாவது கட்டம்: 1960** களில்: சமத்துவம், பதவிகளில் சம வாய்ப்பு, பெண்களை வேறுபடுத்திப் பார்க்காத அணுகுமுறை. [Non Discrimination]
3. **மூன்றாவது கட்டம்: 1990** முதல் இன்று வரை. பெண்ணியக் கோரிக்கைப் பற்றிய மீள் பார்வை.

பெரியார் இந்த மூன்று கட்டங்களையும் 20 – ஆவது நூற்றாண்டின் முற் பகுதியின் முதல் பகுதியிலேயே அறிமுகப்படுத்தி பெரிய அளவில் எழுதியும், பேசியும் பெண்களை மாநாடுகள் மூலம் திரட்டியும் பாடுபடத் தொடங்கிவிட்டார்.

பெண்கள் விடுதலை பற்றிய பெரியாருடைய கருத்துகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு மேலை நாட்டுப் பெண்ணியவாதிகளின் பார்வைக்குச் செல்லுமானால் அவர்கள் அனைவரும் பெரியாரை உலகப் பெண்ணிய இயக்கத்தின் தலைவராக ஏகமனதாக ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பெரியாரின் பெண் உரிமைக் கோட்பாட்டை முறையாக மதிப்பிட்ட தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு கீழ்க்காணும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

> **'இந்தியாவில் இதுவரையும் தோன்றின சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய வியலாமற்போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் செய்துவருவதாலும்; தென்னாட்டில் அவருக்கு மேலாகவும் சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாமையாலும் – அவர் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும்போதெல்லாம், 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம்மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது.'**
>
> **['விடுதலை' – 16–11–1938]**

**6. மக்களிடையே மறுமலர்ச்சி**

பெண் விடுதலைக்கு அடுத்து பெரியார் அவர்கள் பணியில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய, கோடிட்டுக் காட்ட வேண்டிய இன்னொரு அம்சம் உண்டு.

அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட விவேகானந்த அடிகள் இந்தியாவில் நடைபெற்று வந்த பல சீர்திருத்த முயற்சிகளைப் பற்றிப் பேசும் பொழுது பின் வருமாறு கூறினார்.

> ''நமது சீர்திருத்தவாதிகளின் பிரச்சாரம் மேல்தளத்தில் இருப்பவர்கட்கே பயன்படுகிறது. 70 சதவிகிதத்தினர்க்கும் மேலான மக்களை அது எட்டுவதில்லை.''

இது உண்மைதான்: உண்மையிலேயே மேல் தளத்தினர்க்கு இந்த அறிவுரை எல்லாம் பயன்படாது: இந்தச் சீர்திருத்தம் தேவைப்படுவது பொது மக்களுக்கேயாகும்.

முதன் முதலாக இந்திய வரலாற்றில் இந்த 70 சதவிகித மக்களைத் தேடி அவர்கள் இருக்கும் இடத்திற்கு, சேரிகட்கு, சிற்றூருக்கு, சிறு நகரங்கட்கு அதாவது நான் பிறந்து வளர்ந்த வாங்கலாம்பாளையம் அதை அடுத்திருந்த காட்டுப்பாளையம் போன்ற கிராமங்கட்குக்கூட கால் நடையாக, கட்டை வண்டிகளில் சென்று, ஆங்காங்கு சில சூழ்நிலைகளில் செருப்பும், கல்லும் வந்து விழுந்ததை செரிமானம் செய்து குப்பனுக்கும், சுப்பனுக்கும், அம்மணிக்கும், அருக்காணிக்கும் அறிவுரை கூறியவர் பெரியார். சுருக்கமாகச் சொல்வதானால் இந்திய வரலாற்றில் சமுதாயம் தழுவிய முதல் சீர்திருத்தவாதி உலக அரங்கிலேயே பெரியார் தான். பனிக் கட்டி போல் பழமையில்

உறைந்து போயிருந்த சமுதாயத்தை உலுக்கிய முதல் மனிதர் பெரியார் தான். பெரியார் மட்டும்தான். இது அவருடைய மாபெரும் சாதனைகளில் ஒன்று.

சாமான்ய மக்கட்கு, விநாயகர் கடவுள் அல்ல: விநயாகர் சிலையில் வந்தச் சக்தியும் இல்லை என்பதைக் காட்டுவதற்கு விநாயகர் சிலையைப் பொது மக்கள் முன் உடைத்தார். அது படிக்காதவர்களும் புரிந்து கொள்ளக் கூடிய மொழி.

1940 – களில் அண்ணா, கலைஞர் போன்றவர்கள் கதை, வசனம் எழுதி வெளிவந்த படங்கள் வெற்றி பெற்றன. அதே சமயத்தில் 10 – 15 ஆண்டு காலம் கழித்து 1960 – களில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், K.C.S. அருணச்சலம், ஜெயகாந்தன் போன்ற தலை சிறந்த இடது சாரி எழுத்தாளர்களின் முயற்சியில் வெளிவந்த ‘பாதை தெரியுது பார்’ என்ற படம் சிறந்த படமாகத் தேர்வு செய்யப்பட்டாலும். மக்கள் மத்தியில் வரவேற்புப் பெறவில்லை. தோல்வி அடைந்தது என்றும் கூறலாம். காரணம் என்ன? பராசக்தி போன்ற படங்களை வரவேற்பதற்கு ஏற்ற விழிப்புணர்வு சமுதாயத்தில் உருவாவாதற்கான பின்னணித் தயாரிப்பைப் பெரியார் செய்திருந்தார். ‘பாதை தெரியுது பார்’ என்ற படத்தில் இழையோடிய இடது சாரிக் கருத்துகளை வரவேற்கத்தக்க சிந்தனைகள் மக்கள் மன்றத்தில இடம் பெற்றிருக்கவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் கழகத்திற்கு ஒரு பெரியார் இருந்தார். கம்யூனிசத்திற்கு ஒரு பெரியார் கிடைக்கவில்லை.

**7. விடுதலைப் போர்**

பெரியார் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் இரண்டொன்றைக் குறிப்பிடுவது முறையாகும். முதலவதாக அவர் தேசப்பற்று இல்லாதவர். பிரித்தாணிய ஆட்சியை ஆதரித்தவர் என்பதாகும்.

பெரியார் இந்திய சமுதாயம் இரண்டும் விலங்குகளிலிருந்த விடுபட வேண்டும் என்று கருதினார். ஒன்று அந்நிய அரசின் ஆட்சியிலிருந்து விடுதலை. இரண்டு: நமது சமதாயத்தை மூவாயிரம் ஆண்டு ஆட்கொண்டிருக்கும் தீராத பிணி போன்று சமுதாயக் கொடுமைகட்குக் காரணமாக இருக்கும் வைதீகத்திலிருந்து விடுதலை.

இந்திய சமுதாயம் சீர்திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தை மகாகவி பாரதியே முன் வைத்திருக்கிறார். இளம் வயதிலேயே அவர் தெவித்த கருத்திலிருந்து சில பகுதிகள் பின் வருமாறு:

> **“The National Congress, I readily concede, has some of India’s best sons in its ranks and its aspirations are of the worthiest. But does anybody seriously believe that a man who in his stony heart**

**condemns a babe widow to perpetual misery might be placed at the helm of a rising people? Impossible.**

**Without social reform, our political reform is a dream, a myth, for, social slaves can never really understand political liberty.**

**And until and unless our social conferences prove a success our National Congress is nothing but glare and dust."**

பெரியார் இந்தச் சமுதாயம் விடுதலை பெறுவது இந்த வைதீர்களின் ஆட்சியைவிட ஆங்கிலேயர்கள் ஆட்சியில் எளிது என்று கருதினார்.

**The Self respect movement, it's programme and policy.**

என்று அவர் **1935 –** இல் வெளியிட்ட அறிக்கையில் பின் வரும் கருத்துகளை முன் வைக்கிறார்.

"In its economic activities, the Self - Respect Movement aims at raising the standard of life of every citizen. In the social sphere, it aims at the abolition of caste system and the removal of all disabilities based on birth.

It is my personal conviction that our programme has a greater chance of realisation under the guidance of the British Government than under the aegis of the Congress Raj."

எனவே ஏறத்தாழ அவருடைய அணுகுமுறை தேசிய கவியாகிய மகாகவி பாரதியின் சிந்தனையிலிருந்து, பெரிதாக வேறுபடவில்லை. ஆனால் லோகமான்ய திலகரின் தலைமையின் கீழ் மகாகவி பாரதியார் சீர்திருத்த இயக்கத்தை நிலுவையில் வைத்து விடுதலை இயக்கம் முதலாவது என்ற அணுகுமுறையைப் பின்னர் ஏற்றார். ஆனால் பெரியார் அவருடைய மனச் சான்றுக்கு அணு அளவும் விரோதமில்லாமல் இநத நாட்டு அடித்தள மக்கள் சமுதாயக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு வைதீர்கள் தலைமை ஏற்கக் கூடிய காங்கிரஸ் ஆட்சியைவிடச் சற்று முற்போக்குக் கருத்துடைய அங்கிலேயர் ஆட்சி இரண்டு கட்ட விடுதலைகளில் முதலாவதான சமுதாய விடுதலைக்கு சாதகமாக இருக்கும் என்று நம்பினார். தமது நம்பிக்கைக்கு ஏற்ப நடந்து கொண்டார்.

**8. இலக்கியங்களை எரித்தல்**

அடுத்ததாக பெரியார் இலக்கியங்களை எரிக்க வேண்டும் என்று கூறினார் என்ற குற்றச்சாட்டு. பொதுவாக தமிழ் இலக்கியங்களில் சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கான, அரசியல் முன்னேற்றத்திற்கான கருத்துகள் எதுவுமில்லை.

பழைய நூல்கள் அனைத்தும், ஏற்க இயலாத, விரும்பத்தகாத, மூட நம்பிக்கைகளை மூடப் பழக்க வழக்கங்களை ஆதரிப்பதாகவும், பரப்புவதாகவும் இருக்கின்றன என்று கருதினார். அந்தக் கருத்தை வலியுறுத்தி மக்கள் முன் வைப்பதற்கு ஒரு புராண இலக்கிய எதிர்ப்பு முறையாக, அதன் சின்னமாக இராமணயத்தை எரிக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும் அது ஆரிய திராவிடப் போர் பற்றியது என்றும் தமிழர்களைக் குரங்குகளாக, அரக்கர்களாக படம் பிடிக்கிறது என்றும் கூறினார். அவருடைய இந்த இயக்கத்தின் நோக்கம், தவறான கருத்துகளைப் பரப்பும் இலக்கியங்களைக் கண்டிக்க வேண்டும்: அவை பரவலாக்கப்படுவதை தடுக்க வேண்டும் என்பதுதான். அவர் இந்த இலக்கியங்களில் எதுவும் நிரந்தரமாக அழித்துவிடும் என்றோ, அழிக்கப்பட்டு விடக் கூடும் என்றோ நம்பவில்லை.

இங்கு நாம் கிரேக்க இலக்கிய வரலாற்றிலிருந்து ஒரு சான்று கூற விரும்புகிறேன். கிரேக்க இலக்கிய வரலாற்றில் சாக்ரட்டீஸ், ஃபிளேட்டோ போன்றவர்களின் இலக்கியம் பற்றிய கருத்தை ஃபிளேட்டோ தனது குடி அரசு என்ற நூலில் பதிவு செய்கிறார்.

அவர்கள் கருத்து: கடவுள் எப்பொழுதும் நல்லதே செய்வார். யாருக்கும் தீங்கு செய்ய மாட்டார். தவறான செயல்களில் ஈடுபடமாட்டார் என்ற கருத்தைத்தான் இளைஞர்கட்கு எடுத்துரைக்க வேண்டும் என்பது ஆகும். இதற்கு எதிரான நிகழ்ச்சிகளைக் கொண்ட மகாகவி Homer போன்றவர்கள் இலக்கியத்தைக் கூட தடை செய்ய வேண்டும் என்கிறார்.

இத்தலைப்பில் கடவுள்களைப் பற்றிய தவறாக கருத்துகளைக் கொண்டுள்ள ஹோமருடைய இலக்கியப் படைப்புகள் பற்றிய கருத்துப் பின் வருமாறு:

> “But narrative of Hephaestus binding Hera his mother, or how on another occasion Zeus sent him flying for taking her part when she was being beaten, and all the battles of the gods in Homer - **these tales must not be admitted into our State, whether they are supposed to have an allegorical meaning or not.**”

இங்கு நாம் அவர் இலக்கியங்களை எரிக்க வேண்டும் என்று கூறியதை ஆதாரிப்பதற்காக இக்கருத்தைச் சொல்லவில்லை. ஆனால் இலக்கியம் பற்றிய கண்டனங்களை பெரியார் போன்று சாக்ரட்டீஸ், ஃபிளேட்டோ அனைய தத்துவ ஞானிகளும் கூறியிருக்கிறார்கள் என்பதுதான் இங்கு நாம் குறிப்பிட விரும்புவது.

**9. சாதி ஒழிப்பு**

அடுத்ததாக, சாதிகள் பற்றிப் பெரியார் பார்வையும் அவர் இயக்கத்தின் குறிக்கோளும்: சாதி எதிர்ப்பு இந்தியாவிற்குப் புதிதன்று புத்தர் காலத்திலிருந்து வள்ளுவர் காலம் தொடர்ந்து, தற்காலம் வரை, தலைவர்கள் என்பவர்கள் அனைவரும் சாதியை எதிர்த்தவர்களே ஆவர். ஆனால் சாதி ஒழிய வில்லை.

- இந்தியச் சாதி அமைப்பைப் போல் உலகம் முழுவதிலும் வரலாறு தொடங்கிய காலம் முதல் இன்று வரை 3000 ஆண்டுகள் ஏறத்தாழ வலிமை குறையாது நீடித்து நிற்கும் இன்னொரு தீமை எந்தச் சமுதாயத்தையும் ஆட்கொண்டதில்லை.
- இதை ஒழிப்பதற்கு 3000 ஆண்டு எதிர்ப்பு இயக்கங்களால் இயலவில்லை. ஏனெனில் சாதி எதிர்ப்பு, சாதி ஒழிப்பு ஆகாது. ஒழிக்க வேண்டும் ஏன்ற எண்ணத்திற்கு ஏற்ற வகையில் ஒழிப்பது எப்படி என்பது பற்றிய தெளிவு இல்லை.
- சாதி ஒழிப்புப் பற்றி 20–வது நூற்றாண்டில் தீவிரமாக சிந்தித்து அதை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு சென்ற பெருமை பெரியாருக்கு உண்டு.

சாதி எதிர்ப்பு வேறு, சாதி ஒழிப்பு வேறு. எதிர்ப்பதன் மூலமே சாதி ஒழிந்து விடாது: ஒழியவில்லை. ஒழிப்பதற்கான வழி முறைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்ற முறைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அவற்றைச் செயல்படுத்த வேண்டும். இந்த முயற்சியில் ஈடுபட்ட முதல் தமிழ் தலைவர் இந்திய துணைக் கண்ட அளவில் முக்கியமான தலைவர் கூட, பெரியார் தான். சாதி ஒழிப்பு முயற்சியில் டாக்டர் அம்பேத்கார் தனது சீடர்களோடு, புத்த சமுதாயத்தை தழுவியதை மட்டும் ஒரு முயற்சியாகக் கூறலாம்.

பெரியாரின் கொள்கைகளில் மூச்சுப் போன்றது சாதி ஒழிப்புத் தான்.

இந்து மதம் தான் சாதிக்கு அடிப்படை இதில் இடம் பெற்றிருக்கும் சாதி முறைவேறு எந்த மதத்திலும் இடம் பெறவில்லை. எனவே சாதி ஒழிப்பிற்கு இரண்டு பெரிய பாதைகள் உண்டு.

1. இந்த மதத்தைவிட்டு வெளியேறுவது,
2. இந்து மதத்திற்கு உள்ளேயே இருந்து கொண்டு மக்களைச் சீர்திருத்தி அதன் மூலம் சாதியை ஒழிப்பது.

பெரியார் இந்து மதத்தில் இருந்து விலகி இஸ்லாமிய மதத்தை, புத்த மதத்தை தழுவுவது பற்றிச் சிந்தித்தார். அவ்வப்பொழுது தமது சிந்தனையையும் வெளியிட்டார்.

ஆனால் அதன் மூலம் தனது நோக்கம் நிறைவேறும் என்று அவரால் நம்ப இயலவில்லை. மூதலாவதாக மதம் மாறிய இந்துக்கள் சாதியை விட்டுவிடுவார்கள் என்று நம்புவதற்கில்லை. இரண்டாவதாக 5 அல்லது அதற்கும் சற்று மேலான தமிழர்கள் அனைவரும் மதம் மாறுவது என்பதும் நடைமுறையில் சாத்தியமில்லை. நாடு முழுவதும் ஒரே மூச்சில் இந்து மதத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு ஒட்டு மொத்த முயற்சியாகத்தான் இந்த நாட்டின் மதத்தைக் காந்திமதம் என மாற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தார்.

கிறித்துவ மதத்திற்குச் சென்றவர்களை பற்றி பாரதிதாசன் பின் வருமாறு தமது கவிதையில் கூறுகிறார்.

**மோசம் அவர்க்கென்ன வந்தது கூறடி தோழி – அந்த**
**முன்–மனு என்பவன் சொன்னதில் வந்தது தோழா**
**நாசம் விளைக்க நவின்றது யாதடி தோழி – சட்டம்**
**நால் வருணத்தினில் நாலாயிரம் சாதி தோழா – அவன்**
**ஆசை மதம்புகப் – பேதம் அகன்றதோ? தோழி – அவர்க்**
**கங்குள்ள மூதேவி இங்கும் முளைத்தனள் தோழா**

அண்மையில் The Church of South India's Madras Diocesan Council நிறைவேற்றிய தீர்மானம் பற்றி, கீழ்க்காணும் செய்தி வெளியாகியிருக்கிறது.

> "The continuance of caste system among Christians in spirit and action was one of the worst forms of idolatry"

என்று கூறிவிட்டு.

> "The council strongly criticised all forms of discrimination based on caste as evil in indian society and believed firmly that only a casteless society could lead to the well being of all."

என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

பெரியார் முதன் முதலாக இந்த சமுதாயத்தின் சாதி பாகுபாடு முதல் மற்ற இழிவுகட்கும் முற்றுப் புள்ளி வைப்பதற்கு முதற் படியாக எடுத்து வைத்த கொள்கைதான் வகுப்புவாதி பிரநிதித்துவம். சமூக நீதி என்பது சாதி ஒழிப்பிற்கு முதல் படியாகும்.

- 1920–களில் வகுப்புவாதி பிரதிநிதித்துவம் இடம் பெறுவதற்கு முழுமையான காரணமாக இருந்தவர் பெரியார்.

- இந்திய நாடு விடுதலை பெற்ற பின் அரசியல் அமைப்புக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் எதிரானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தபின் அதை அரசியல் சட்டத்திற்கு இயைந்த ஒன்றாக மாற்ற இந்திய அரசிய்ல சட்டத்திலேயே முதன் முதலாகத் திருத்தம் கொண்டு வருவதற்கு காரணமாக இருந்தவரும் பெரியார் தான்.

**இன்று பரவலாக பேசப்படும் மண்டல் குழுமத்தின் பரிந்துரைக்கு வாயில் திறந்தது அந்தத் திருத்தம்தான். காஷ்மிர் முதல் கன்னியாகுமரி வரை பொருளாதார பிரச்சினைகளைவிட, அரசியல் பிரச்சினைகளைவிட முக்கியமாக விசுவரூபம் எடுத்து சமுதாய நீதி என்ற தலைப்பில் இந்திய மக்களை இன்று ஆட்கொண்டிருக்கும் சம வாய்ப்பு தத்துவத்திற்கு தந்தையும் தாயும் பெரியார்தான் என்பதை இந்தச் சமயத்தில் இங்கு பதிவு செய்வது முறையாகும்.**

அவர் அடிப்படை அமைத்துக் கொடுத்து இந்த உயரிய தத்துவம், இன்று பெரிய அளவில் அரசியலாக்கப்பட்டு, அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களுடைய தன்னலத்திற்காக, அதைப் பயன்படுத்துவதில் எவ்வித உயர் நோக்கமுமில்லாத கொள்கைகட்கு அதைக் கருவியாக்கி, பெரியார் கனவிலும் எதிர்பார்த்திராத பொறாமை உணர்வுகட்கும், விரோத உணர்வுகட்கும் இடம் உண்டாக்கி, ஓரளவு, தமிழ் இன உணர்வு மறைந்து, சாதி உணர்வு மேலோங்குகிறதோ என என் போன்ற தமிழினப் பற்றாளர்கள், தமிழ் மொழிப் பற்றாளர்கள் அச்சப்படும் வகையில், ஆதங்கப்படும் வகையில் ஐயா அவர்கள் அமைத்துக் கொடுத்த ஒரு புனிதமான சமுதாயக் கொள்கை களங்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றிக் கூறுவதானால் அதுவே ஒரு முழுத்தலைப்பாக அமைந்துவிடும். எனினும் இரண்டொரு வரிகளில் என்னுடைய இந்த ஆதங்கத்தைத் தெரிவிப்பதை தவிர்க்க இயலவில்லை, தவிர்க்கவும் நான் விரும்பவில்லை.

**10. ஒழுக்கம்: தவம்: வேள்வி**

- பெரியார் அவர்களைப் பொருத்தவரை சொல் வேறு, செயல் வேறு என்பதில்லாது வாழ்ந்தவர். இதுதான் மனித வாழ்க்கையில் உண்மையான ஒழுக்கம்.
- தன்னலம் என்பது கருதாது வாழ்நாள் முழுவதும் தம் முயற்சிகளை மேற்கொண்டார். இதுதான் அவர் செய்த தவம்.

- தனது முயற்சிகளில் வெற்றி பெற நான் முன்பு கூறியதுபோல. ஒய்வின்றி, ஒழிவின்றி உண்மையிலேயே தமது இறுதி மூச்சு வரை உழைத்தார். இதுதான் அவர் மேற்கொண்ட வேள்வி.

**11. UNESCO**

இறுதியாக அவரைப் பற்றிய தமது மதிப்பீடு ஒரு புறம் இருக்க. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் [UNESCO] தந்துள்ள மதிப்பீடு பின் வருமாறு:

Periyar, The prophet of the new age;
The Socrates of South East Asia;
Father of the Social Reform Movement;
And Arch Enemy of Ignorance,
Superstitions, Meaningless Customs
And Base Manners.

Unesco - 27.06.1970

[UNESCO MANDRAM AWARD was given to PERIYAR on 27th June 1970 at Chennai under the Presidentship of the Tamil Nadu Cheif Minister Hon. Kalaingar M. Karunanidhi, The Award was presented by Dr. TRI GUNA SEN, the Union Minster for Education, Government of India].

**12. Millennium Makers**

**20–**ஆவது நூற்றாண்டு முடிந்து, **21 –** ஆவது நூற்றாண்டு ஆரம்பத்தில் இந்தியா **1000 – 2000: Makers of the Millennium** என்ற தலைப்பில் **Indian Express** நிறுவனத்தின் வெளியீட்டில் வந்த நூலில் கீழ்க்காணும் மதிப்பீடு இடம் பெற்றிருக்கிறது.

The enormous privileges given to Brahmins by the Vedas were sacrosanct only as long as they were unchallenged. The challenge rose in Tamil country like a whirlwind, spearheaded by an iconoclast who questioned the Vedas and gods as well. He took apparently extremist positions on some issues, but the fundamental nature of the social revolution he wrought was clear even to its victims. The political perspectives of Tamil Nadu and with it much of India, were altered with a seeming finality by

Ramasamy Naicker, 1879-1973 (Courtesy: Express Publications (Madurai) Ltd.)

**13. முடிவாக . . .**

இந்த மதிப்பீட்டை உறுதிப்படுத்தும் வகையில் பெரியார் அவர்களின் வரலாறு இந்திய துணைக் கண்டம் முழுவதற்கும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதுதான். இந்தச் சொற்பொழிவின் இறுதியில் நான் வைக்கும் வேண்டுகோள்.